தில்லை என்றும் பலேகரின் அவார்டில் இல்லை. கொடுத்து தான் ஆகவேண்டும் என்பது தான் நம்முடைய அரசினுடைய 'ஸ்டாண்ட்'.

[முற்பகல் 9.40]

பொதுவாக பாதிதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஊதியம் தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, பஞ்சப்படி நிர்ணயிக்கப்பட வில்லை. அதுவும் நிர்ணயிக்கப்பட்ட பிறகு யார் யார் அமல் படுத்துகிறார்கள், யார் யார் அமல் படுத்தவில்லை என்பதைப் பார்த்து ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களைக் கூட்ட ஏற்பாடு செய்து அதன் விளைவுகளைப் பார்த்து என்ன செய்யலாம் என் பதைப்பற்றி அரசு முடிவு எடுக்கும். எல்லாத் தொழிலாளர் களுக்கும் அந்தப் பரிந்துரைப்படி ஊதியம் கொடுக்கப்பட வேண்டுமென்பதில் அரசு அக்கறையாக இருக்கிறது. அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்யும்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இண்டியன் எக்ஸ்பிரஸ் குளோஷர் நோட்டீஸில் பலேக்கார் அவார்டை அமல் நடத்துவதிலே ஒரு பெருந்தொகை கமிட் பண்ணவேண்டி இருக்கிறது என்ற ஒரு ஷரத்து வருகிறது. ஒரு பக்கத்திலே பலேக்கர் அவார்டை அமல்படுத்துவது என்று கமிட் பண்ணிவிட்டு, ஆனால் செலவைச் சரிக்கட்டுவதற்காக, மிச்சப்படுத்துவதற்காக 22 பேர்களை ரிட்ரென்ச் பண்ணப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்படி பலேக் கார் அவார்டை அமல்படுத்துகிறபோது ரிட்ரென்ச் செய் வதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித் துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரிட்ரென்ச் பற்றிச் சொல்கிறார்கள். அவர்கள் 20—6—1981 முதல் அந்த நிறு வனத்தையே மூடிவிட இருக்கிறார்கள். அது முன்னாலே நடந் தது. அப்போது கமிஷனர் பேச்சு வார்த்தை நடத்தி சமரசம் ஏற்படுத்தப்பட்டது. The position has gone still worse now. இப்போது அவர்கள் 20—6—1981 லிருந்து முடிவிடுவதாக இருக்கிறார்கள். நாம் பேச்சுவார்த்தை நடத்துகிறோம், தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவோம்.

கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் லைனிங் போடும் திட்டம்

*வினா எண் 1002—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்த சாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் லைனிங் போடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

1981 மே 6]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) முதல் நிலை ஆய்வு முடிந்து விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், விபர மதிப்பீடுகள் தயாரித்த பின் அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இதன் மூலம் கூடுதலாக எவ்வளவு ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆய்வு வேலைகள்தான் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் என்னால் தோராயமாக ஒரு மதிப்பீட்டைச் சொல்ல முடியும். கிட்டத்தட்ட 2 ஆயிரம் மைல் இந்த கால்வாயை நவீனப்படுத்த வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக 47 கோடி ரூபாய் செலவாகும் என்று ஆரம்பத்திலேயே மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆனால் ஏற்றத்தொகை, எஸ்கலேஷன் காஸ்ட் காரணமாக 61 கோடி ரூபாய் அளவுக்கு செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 62 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நஞ்சை பயிர் கூடுதலாகப் பாசனம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளதா? நிதியுதவி அளிப்பதற்கு உலக வங்கி ஒப்புக்கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் ஆய்வு வேலைகள் முடிவுற்றதற்குப் பிறகு மாநில நிதி அளவில் செய்வதா என்பதை அரசு முடிவு செய்யும். அல்லது உலக வங்கியிடமிருந்து பெற்று செய்ய முடியுமா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்கும். எதை விரைவாகச் செய்யமுடியும் என்று பார்த்து அதைச் செய்வதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது என்னுடைய தொகுதியில் 10 ஆயிரம் ஏக்கர்வரை சர்வே செய்து நிலத்தை அளந்து பண்ணைக்கூட கொடுத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு அப்படியே விட்டுவிட்டார்கள். ஆகவே கூடுதலாக பாசன வசதி கொடுக்கும்போது அந்த ஏக்கர்களுக்கும் பாசன வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 62 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் மாண்புமிகு, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

பொன்விளைந்தகளத்தூர் ஏரியின் மண்கரையினை அணைக்கட்டாக்கும் திட்டம்

*வினா எண். 1003—திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டம்—பொன்விளைந்தகளத்தூர் ஏரி வெள்ளக் காலில் உள்ள மண்கரை ஆண்டுதோறும் உடைப்பெடுப்பதால் அணைக்கட்டாக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவர் அவர்களே, இந்த ஏரியின் மூலமாக 1,200 ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருபோக சாகுபடிக்குப்பயன்படுகிறது. இந்த ஏரிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவிட்டு சீரமைப்பு வேலை நடைபெற்றிருக்கிறது. இருந்தாலுங்கூட மண் கரையில் தொடர்ந்து 10 ஆண்டு காலமாக உடைப்பு ஏற்பட்டு வருகிறது. இதற்கு ஒரு சிறு தடுப்புச் சுவர் எழுப்பி, கல் அணையாகக் கட்டித் தேக்கினால் இந்த ஏரி வலுவடைவது மட்டுமல்லாமல் இந்த ஏரியின் உபரி நீரை ஏழு நீர்ப்பாசன ஏரிகள் பயன்படுத்துவதற்கான தண்ணீர் இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை இந்த ஆண்டாவது எடுத்துச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே மூலக்கேள்வியில் ஆண்டுதோறும் உடைப்பெடுப்பதால் அணைக்கட்டாக்கும் திட்டம் என்று இருக்கிறது; அதனால் இல்லை என்று சொன்னேன். இப்பொழுது இந்தத் துணைக்கேள்வியில் அந்தப் பகுதி தொடர்ந்து வெள்ளத்தின் காரணமாக உடைந்து போகாமல் இருக்க ஏதாவது தடுப்புச் சுவர் போலக் கட்ட முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து இப்பொழுது ஆய்வு செய்யச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறது. தோராயமாக நான்கைந்து இலட்சம் ரூபாய் ஆகும் என்ற தகவல் வந்திருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு அந்த நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சி செய்யும்.